# நாட்டு மக்களுக்கு காவல் அரணாகத் திகழ்வோம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை... 3ஆம் பக்கத் தொடர்ச்சி!

நாம் ஒன்று சேரமாட்டோம் என்று நினைத்த பா.ஜ.க.வுக்கு அது அதிர்ச்சியாக இருந்தது. உடனே இந்த கூட்டணி ஒன்று சேரக் கூடாது என்று என்னவெல்லாம் செய்தார்கள்... ஒவ்வொரு கட்சிகளையும் I.T. - E.D. - C.B.I. - போன்ற புலனாய்வு அமைப்புகளை வைத்து மிரட்டினார்கள். காங்கிரஸ் கட்சிக்கும், கம்யூனிஸ்ட் கட்சிக்கும் வங்கிக் கணக்கை முடக்கினார்கள். டெல்லி முதலமைச்சரையும், ஜார்க்கண்ட் முதலமைச்சரை யும் கைது செய்தார்கள்.

**தேர்தல் பிரச்சாரத்தில் தமிழர்களை கொச்சைப்படுத்திய பா.ஜ.க.!**

அதுமட்டுமல்ல, தேர்தல் அறிவித்த பிறகு பா.ஜ.க. என்னவெல்லாம் செய்தார்கள்? விதிகளை மீறி மக்களிடையே பிரிவினையை உண்டாக்குவதுபோன்று தேர்தல் பிரசாரம் செய்தார்கள். சிறுபான்மைச் சமூகத்தினரைத் தரக்குறைவாகப் பேசினார்கள். உத்திரபிரதேசத்திலும், ஒடிசாவிலும் தமிழர்களைக் கொச்சைப்படுத்தினார்கள். ஏராளமான போலிச் செய்திகளையும், அவதூறுகளையும் பல கோடி ரூபாய் செலவில் வாட்ஸ்ஆப்பில் பரப்பினார்கள். இவ்வளவு செய்தும், பா.ஜ.க. வாங்கியது எவ்வளவு? 240 தான்! இந்த 240 என்பது, மோடியின் வெற்றி இல்லை; மோடியின் தோல்வி!

அருமை நண்பர் ஆந்திர முதலமைச்சர் சந்திரபாபு நாயுடு அவர்களும் - மரியாதைக்குரிய பீகார் முதலமைச்சர் நிதிஷ்குமார் அவர்களும் ஆதரவு தந்திருக்காவிட்டால் மெஜாரிட்டி ஏது! அவர்களால்தான் மோடி இப்போது பிரதமராக உட்கார்ந்திருக்கிறார்.

நாம் நம்பிய அரசியல் சட்டமும், ஜனநாயகமும்தான் இந்த தேர்தலில் வெற்றி பெற்றிருக்கிறது. 237 உறுப்பினர்கள் பா.ஜ.க.வுக்கு எதிராக, நாடாளுமன்றத்தில் உட்கார்ந்திருக்கிறோம். பா.ஜ.க. நினைத்தையெல்லாம் செய்ய முடியாது. இப்போது கூட, தமிழ்நாட்டில் இருந்து 40 பேர் வெற்றி பெற்று நாடாளுமன்றத்துக்குச் சென்று என்ன செய்யப் போகிறார்கள் என்று சில அதிமேதாவிகள் கேட்கிறார்கள். அவர்கள் எல்லாம் யாரென்றால்... தங்களை தாங்களே அறிவாளியாக நினைத்துக் கொள்பவர்கள்! ஜனநாயகத்தின் அடிப்படை தெரியுமா அவர்களுக்கு? இப்படி கேள்வி கேட்டு அவர்கள் நம்மை இழிவுபடுத்தவில்லை... நாட்டு மக்களைத்தான் இழிவுபடுத்துகிறார்கள்!

**கருத்துகளால் உங்கள் ஆணவத்தை சுடுபவர்கள் நாங்கள்!**

“40 பேர் கேண்டீனில் வடை சாப்பிடச் செல்கிறீர்களா?” என்று சிலர் கேட்கிறார்கள்... வாயால் வடை சுடுவது எல்லாம் உங்கள் வேலை! எங்கள் எம்.பி.க்கள் கருத்துகளால் உங்கள் ஆணவத்தைச் சுடுவார்கள்! Wait and seee! இதற்கும் ஒரு எடுத்துக்காட்டு சொல்லட்டுமா... கடந்த ஐந்து ஆண்டுகளில் நாடாளுமன்றத்தில் நம்முடைய எம்.பி.க்கள் 9 ஆயிரத்து 695 கேள்விகள் எழுப்பியிருக்கிறார்கள். 1,949 விவாதங்களில் பங்கெடுத்திருக்கிறார்கள். 59 தனிநபர் மசோதாக்களைக் கொண்டு வந்திருக்கிறார்கள்.

இதைவிட முக்கியமாக அவர்களுடைய செயல்பாடுகளை அங்கீகரிக்கின்ற இன்னொரு விஷயம் இருக்கிறது... ஒன்றிய அமைச்சர்கள் அமித் ஷா, நிர்மலா சீதாராமன் ஏன், பிரதமர் மோடி என்று ஒட்டுமொத்த பா.ஜ.க. அமைச்சர்களும் தி.மு.க.வை எதிர்த்துத்தான் நாடாளுமன்றத்தில் அதிகம் பேசியிருந்தார்கள்! இதைவிட வேறு என்ன சான்றிதழ் வேண்டும்?

**நம்முடைய குரல் நாடாளுமன்றத்தில் மேலும் வலுவாக ஒலிக்கும்!**

பா.ஜ.க.வுக்கு அதிகப் பெரும்பான்மை இருந்தபோதே, தங்களுடைய வாதங்களால் நாடாளுமன்றத்தையே திரும்பிப் பார்க்க வைத்தவர்கள் நம்முடைய தமிழ்நாட்டு எம்.பி.க்கள். இப்போது மைனாரிட்டி பா.ஜ.க. அரசு இருக்கும்போது அடங்கிப் போவார்களா? மக்களுக்கான நம்முடைய குரல் இன்னும் வலுவாக நாடாளுமன்றத்தில் ஒலிக்கப் போகிறது!





கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (15.6.2024) கோவையில், நடைபெற்ற முப்பெரும் விழாவில் சிறப்புரையாற்றினார். இவ்விழாவில், திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி. வீரமணி, கழகப் பொருளாளர் டி.ஆர். பாலு, முதன்மைச் செயலாளர் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, இளைஞர் அணிச் செயலாளர் – இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், கழக துணைப் பொதுச் செயலாளர்கள், அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் செல்வப்பெருந்தகை, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி மாநிலச் செயலாளர் கே.பாலகிருஷ்ணன், விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல். திருமாவளவன், இந்திய யூனியன் முஸ்லீம் லீக் கட்சி தேசியத் தலைவர் பேராசிரியர் காதர் மொய்தீன், மக்க மக்கள் நீதி மய்யத்தின் துணைத் தலைவர் ஏ.ஜி. மவுரியா, மனித நேய மக்கள் கட்சித் தலைவர் பேராசிரியர் ஜவாஹிருல்லா, மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழக தலைமைக் கழக செயலாளர் துரை வைகோ, கொங்கு நாடு மக்கள் தேசிய கட்சி பொதுச்செயலாளர் ஈஸ்வரன், தமிழக வாழ்வுரிமை கட்சித் தலைவர் வேல்முருகன், மனிதநேய ஜனநாயக கட்சி தலைவர் தமிமுன் அன்சாரி, ஆதித்தமிழர் பேரவை நிறுவனத் தலைவர் அதியமான், கூட்டணிக் கட்சிகளின் தலைவர்கள் மற்றும் நிர்வாகிகள், தலைமைக் கழக நிர்வாகிகள், கோவை மாவட்டக் கழகச் செயலாளர்கள் மற்றும் கழகத்தின் பல்வேறு அணிகளின் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

நம்முடைய உறுப்பினர்கள்தான் பா.ஜ.க.வை கொள்கை கோட்பாடுகள் ரீதியாக அம்பலப்படுத்தினார்கள். அரசியல்ரீதியாக பா.ஜ.க.வை விமர்சிப்பது என்பது வேறு! ஆனால், கொள்கைரீதியாக அவர்களுடைய வகுப்புவாதத்தை, எதேச்சாதிகாரத்தை, பாசிசத்தை விமர்சிக்கின்ற பாணியை இந்திய நாடாளுமன்றத்தில் தொடங்கி வைத்தவர்கள் நம்முடைய நாடாளுமன்ற உறுப்பி னர்கள்தான்.

**சமூகநீதிக்காக இந்திய நாடாளுமன்றத்தில் அதிகமாக உரிமைக்குரல் எழுப்பியது மூலமாக, இந்திய அரசியல் செல்ல வேண்டிய பாதையைத் தமிழ்நாட்டு நாடாளுமன்ற உறுப்பினர்கள் கடந்த முறை போட்டுக் கொடுத்தார்கள். இந்த முறை நம்முடைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் எப்படி செயல்பட வேண்டும் என்று நான் விரும்புகிறேன் என்றால்... நாடாளுமன்றத்தில் பேரறிஞர் அண்ணா பேசினார் - ஈ.வெ.கி.சம்பத் பேசினார் - நாஞ்சிலார் பேசினார் - முரசொலி மாறன் பேசினார் என்று இன்றைக்கும் பெருமையாகச் சொல்லிக்கொண்டு இருக்கிறோமே... அதுபோல, ஒட்டுமொத்த நாடாளுமன்றத்தின் கவனத்தையும் ஈர்க்கின்ற மாதிரி, மற்ற நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு எடுத்துக்காட்டாக இருக்கின்ற மாதிரி, உங்களுடைய நாடாளுமன்ற உரைகள் ஒவ்வொன்றும் அமைய வேண்டும்! இந்தியாவின் அரசியலமைப்புச் சட்டத்தை சமூக நீதியை -மதச்சார்பின்மையை - நாட்டின் பன்முகத்தன்மையை இந்தியப் பண்பாட்டு விழுமியங்களை - காப்பாற்றுகின்ற மாதிரி அது இருக்க வேண்டும்! அப்படித்தான் அமையும் என்று நான் நிச்சயமாக நம்புகிறேன்.**

**தமிழ்நாட்டின் உரிமைக்காக நாடாளுமன்றத்தில் உரக்கப் பேசுங்கள்!**

மேடையில் உள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களே... நாங்களும், தமிழ்நாட்டு மக்களும் உங்கள் தோளில் ஏற்றி வைத்திருக்கும் இந்தக் கடமைகளுக்காக தமிழ்நாட்டு உரிமைகளுக்காக, நாடாளுமன்றத்தில் உரக்கப் பேசுங்கள்! பலம் பொருந்திய எம்.பி.க்கள் சேர்ந்து, பலவீனமான மைனாரிட்டி பாஜக அரசை - பாசிச பாதையில் செல்லாமல் தடுங்கள். ஒற்றுமை உணர்வுடன் கொள்கை திறத்துடன் அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் செயல்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

தி.மு.க. எம்.பி.க்கள் கூட்டத்தில் சொன்னதை, மறுபடியும் இங்கே இருக்கின்ற அனைத்து எம்.பி.க்களுக்கும் சொல்கிறேன்... “வாக்களித்த மக்களுக்கு உண்மையாக - உங்களுக்கு வாய்ப்பு வழங்கிய கட்சித் தலைமைக்கு உண்மையாக நடந்து, தமிழ்நாட்டுக்குப் பெருமை சேர்க்க வேண்டும்”.

> **நம்முடைய உறுப்பினர்கள்தான் பா.ஜ.க.வை கொள்கை கோட்பாடுகள் ரீதியாக அம்பலப்படுத்தினார்கள். அரசியல் ரீதியாக பா.ஜ.க.வை விமர்சிப்பது என்பது வேறு! ஆனால், கொள்கைரீதியாக அவர்களுடைய வகுப்புவாதத்தை, எதேச் சாதி காரத்தை, பாசிசத்தை விமர்சிக்கின்ற பாணியை இந்திய நாடாளுமன்றத்தில் தொடங்கி வைத்தவர்கள் நம்முடைய நாடாளுமன்ற உறுப்பினர்கள்தான்.**

**பா.ஜ.க.வின் பாசிசத்தை தடுக்கும் காவல் அரணாக 40 பேரும் இருப்பார்கள்!**

இந்த 40 எம்.பி.க்களை வழங்கிய தமிழ்நாட்டு மக்களுக்கு நான் சொல்ல விரும்புவது... இந்திய அரசியலமைப்புச் சட்டத்தையே மாற்றிவிட வேண்டும் என்று துடிக்கின்ற பா.ஜ.க.வை தடுக்கின்ற காவல் அரணாக நம்முடைய 40 எம்.பி.க்களும் இருப்பார்கள் என்று உறுதியாகச் சொல்லிக் கொள்கிறேன்.

இது தலைவர் கலைஞரின் நூற்றாண்டு நிறைவு ஆண்டு. ஆண்டு முழுவதும் நாம் கட்சி சார்பாகவும், ஆட்சி சார்பாகவும் நலத்திட்ட நிகழ்ச்சிகள், பேச்சுப் போட்டிகள், விளையாட்டுப் போட்டிகள், கவிதை – கட்டுரை போட்டிகள், கருத்தரங்கங்கள் - கவியரங்கங்கள் என்று கொண்டாடினாலும், தலைவர் கலைஞருக்குப் பிடித்த பரிசு எது தெரியுமா? தி.மு.க. கூட்டணியின் வெற்றிதான் அவருக்குப் பிடித்த பரிசு!

**கழகத்தின் வெற்றியை மட்டுமே சிந்திக்கும் கலைஞருக்கு நாம் தரும் நூற்றாண்டு பரிசு!**

அவர் எப்படிப்பட்ட தலைவர் என்றால், பாளையங்கோட்டைச் சிறையில் இருந்த போது, தன்னை வந்து சந்தித்த அண்ணாவிடம், அப்போது நடைபெற இருந்த தருமபுரி தேர்தலைப் பற்றித்தான் கலைஞர் முதலில் கேட்டிருக்கிறார். இதைப்பற்றி, பேரறிஞர் அண்ணா என்ன சொன்னார் தெரியுமா? “என் தம்பியை நலம் விசாரிக்கச் சென்றால், அவனோ கழகத்தின் வெற்றியைப் பற்றியே கவலைப்பட்டுக் கேட்டான்” என்று எழுதினார் பேரறிஞர் அண்ணா. அப்படி, எப்போதும், எந்த நேரமும், எந்தச் சூழலிலும் கழகத்தின் வெற்றியைப் பற்றி மட்டுமே சிந்தித்த தலைவர் கலைஞருக்கு, ‘நாற்பதுக்கு நாற்பது’ என்பதைவிட சிறப்பான நூற்றாண்டு பரிசு, வேறு என்னவாக இருக்க முடியும்?

இந்த நாடாளுமன்றத் தேர்தல் பரப்புரையின்போது, இன்னும் 24 அமாவாசைதான் இருக்கிறது என்று உளறிக்கொண்டு இருந்த எதிர்க்கட்சித் தலைவர் பழனிசாமி அவர்களுக்குச் சிதம்பரம் கூட்டத்தில் ஒன்றைச் சொன்னேன். “சட்டமன்றத் தேர்தல் வரட்டும். அ.தி.மு.க.விடம் இருக்கும் தொகுதிகளையும் சேர்த்தே தி.மு.க. பறிக்கும். இது உறுதி. இதை ஆணவத்தில் சொல்லவில்லை. தமிழ்நாட்டு மக்களுக்கு நாங்கள் செய்த, செய்ய இருக்கிற நன்மைகள் மேல் நம்பிக்கை வைத்துச் சொல்கிறேன்” என்று சிதம்பரத்தில் பேசினேன்.

பழனிசாமி அவர்களே... இப்போது 39 நாடாளுமன்றத் தொகுதிகளுக்குட்பட்ட 234 சட்டமன்றத் தொகுதிகள் வாரியாகத்தான் வாக்கு எண்ணிக்கை நடத்தப்பட்டது. அதன்படி பார்த்தால், தி.மு.க. கூட்டணி 221 இடங்களில் முன்னிலை வகித்திருக்கிறது.

**விக்கிரவாண்டியிலும் மாபெரும் வெற்றி பெறுவோம்!**

அடுத்து, இன்னும் சிறிது நாட்களில் விக்கிரவாண்டி இடைத்தேர்தல் நடைபெற இருக்கிறது. அந்தத் தேர்தலிலும், நம்முடைய கூட்டணி வேட்பாளர் அன்னியூர் சிவாதான் பெருவாரியான வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெறப் போகிறார். தொடர் வெற்றியால் எனக்கு மமதை வந்துவிடவில்லை; ஆணவம் ஏற்படவில்லை; மாறாக எனக்கு நம்பிக்கையையும், மகிழ்ச்சியையும் கொடுத்திருக்கிறது.

நம்முடைய உழைப்பு வீண் போகவில்லை என்ற மனநிறைவைக் கொடுத்திருக்கிறது; தமிழ்நாட்டிற்காக, தமிழ்நாட்டு மக்களுக்காக இன்னும் இன்னும் உழைக்க வேண்டும் என்ற ஊக்கத்தைக் கொடுத்திருக்கிறது!

**மக்கள் எங்கள் மீது வைத்துள்ள நம்பிக்கை வீண் போகாது!**

இந்த மேடையில் நின்று, வாக்களித்த மக்களுக்கு நான் அளிக்கின்ற உறுதிமொழி என்னவென்றால், “எங்களை நம்பி பொறுப்புகளைக் கொடுத்திருக்கிறீர்கள். உங்கள் நம்பிக்கை நிச்சயம் வீண் போகாது! உங்களுக்காக உழைப்பதுதான் எங்களுடைய கடமை! எங்களுடைய கடமையை நாள்தோறும் செய்வதுதான் நாங்கள் உங்களுக்கு செலுத்தும் நன்றி!” அந்த நன்றி உணர்வுடன் சொல்கிறேன், இனி தமிழ்நாட்டில் எப்போதும் நம்முடைய திராவிட மாடல் ஆட்சிதான் என்ற நிலைமையை உருவாக்குவோம்.

வர இருக்கும் சட்டமன்றத் தேர்தலில் “200க்கும் அதிகமான தொகுதிகளை நம்முடைய கூட்டணி கைப்பற்றியது” என்ற இலக்கை நோக்கிய நம்முடைய பயணத்தை இன்றிலிருந்து தொடங்குவோம். 2026ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தல் வெற்றிக்கு இந்த வெற்றிவிழா கட்டியம் கூறட்டும்! தலைவர் கலைஞர் புகழ் வாழ்க! தமிழ்நாடு வெல்க!

இவ்வாறு தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

---

### பால்சாகித்ய புரஸ்கார் - யுவ புரஸ்கார் விருதுகளுக்கு தேர்வாகியுள்ள

## யூமா வாசுகி - லோகேஷ் ரகுமானுக்கு வாழ்த்துகள்!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைத்தளப் பதிவு!

சென்னை, ஜூன் 17-

பால்சாகித்ய புரஸ்கார் விருதிற்கு தேர்வாகியுள்ள யூமா வாசுகி அவர்களுக்கும், யுவ புரஸ்கார் விருதிற்கு தேர்வாகியுள்ள லோகேஷ் ரகுராமன் அவர்களுக்கும் வாழ்த்து தெரிவித்து தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

**நாவல், கவிதை, சிறுகதை என அனைத்து வடிவங்களிலும் தமிழிலக்கியத்தில் தனி அடையாளத்துடன் பயணித்து வருபவர் யூமா வாசுகி. ஏற்கனவே சிறந்த மொழிபெயர்ப்பிற்கான சாகித்ய அகாதமி விருது வென்றுள்ள அவர், தற்போது ‘தன்வியின் பிறந்தநாள்’ நூலுக்காக பால்சாகித்ய புரஸ்கார்க்கும்** (BalSahityaPuraskar) **தேர்வாகியிருப்பது மகிழ்ச்சியளிக்கிறது. தமிழில் இன்னும் வளம்பெற வேண்டிய சிறார் இலக்கிய வகைமைக்கு அவர் ஆற்றிவரும் பாராட்டுக்குரிய பங்களிப்புக்கான உரிய அங்கீகாரம் இது! வாழ்த்துகள்!**

**காவிரிக்கரையில் இருந்து மற்றுமொரு இலக்கிய வரவாகத் தடம் பதித்து, ‘விஷ்ணு வந்தார்’ சிறுகதைத் தொகுப்பிற்காக யுவ புரஸ்கார்க்குத்** (Yuva Puraskar) **தேர்வாகியுள்ள நம்பிக்கைக்குரிய இளைஞர் லோகேஷ் ரகுராமன் அவர்களுக்கும் எனது பாராட்டுகள்.**

இவ்வாறு முதல்வர் அவர்கள், தமது பதிவில் தெரிவித்துள்ளார்.

---



குவைத்தில் நடந்த தீ விபத்தில் உயிரிழந்த திருச்சி திருவெறும்பூர் தொகுதி நவல்பட்டு போலீஸ் காலனி அண்ணா நகரைச் சேர்ந்த ராஜுவின் குடும்பத்தினரைச் சந்தித்து திருவெறும்பூர் சட்டமன்ற உறுப்பினரும் அமைச்சருமான அன்பில் மகேஸ் பொய்யாமொழி ஆறுதல் தெரிவித்து நிதியுதவி வழங்கினார். இந்நிகழ்வில் ஒன்றியக் கழகச் செயலாளர் கங்காதரன், பொதுக்குழு உறுப்பினர் சண்முகம், கழக நிர்வாகி தங்கமணி மற்றும் நிர்வாகிகள் குடும்பத்தினர் உடன் இருந்தனர்.